# Boycott? or No Boycott?

# சமூகப் புறக்கணித்தலோ?

**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

மௌரிஷியஸ் நாட்டை சார்ந்த அஹ்மதியா முஸ்லீம் ஜமாஅத்தின் அமீர் மூஸா தாஜீ அவர்களையும் அன்னாரின் கீழ் இயங்குகின்ற தலைமை செயற்குழு அமைப்பின் உறுப்பினர்களையும், அஹ்மதியா முல்லாக்களையும் அஹ்மதியா முஸ்லீம்களையும் குறிப்பிட்டு, இந்நூற்றாண்டின் கலீஃபத்துல்லாஹ்வும் இறை தூதரும் முஜத்தீதுமான ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் கூறுகின்றார்.

**அவர்கள் உம்மை பொய்யாக்குகின்றார் என்றால், உமக்கு முன்னர் தெளிவான அடையாளங்களையும், ஞானநூல்களையும் ஒளிமயமான வேதத்தையும் கொண்டு வந்த பல தூதர்களும் பொய்யராக்கப்பட்டிருந்தனர்.** (3-185).

நிதானத்தோடு அல்லாஹ்வின் உதவியை தேடிக்கொண்டிருப்பதும் அவ்வாறு, அல்லாஹ்விடமிருந்து வருகின்ற உண்மையை ஒத்துக்கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் செய்கின்ற அனைவர்களுக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வா ரஹ்மத்துல்லாஹிவா பர்க்காத்துஹு.

பௌதீகத்தின் பின்னால் சென்று, ஆன்மீக அருள்களை இழக்கசெய்கின்ற மனிதர்களின் நிலை துன்பம் நிறைந்ததேயாகும். அஹ்மதியா முஸ்லீம் ஜமாஅத்தின் இன்றைய கலீஃபாவின் பிரதிநிதியான ஒரு அமீர், **'ஜலஸா ஸாலானா'**வில் ஆற்றிய சொற்பொழிவின் போது பௌதீக முன்னேற்றத்தை குறித்து பிரதிபாதித்த வேளையில் இவ்வாறு கூறினார்.

அஹ்மதிகளாகிய நமக்கு அல்லாஹ் ஏராளமான அருள்கள் வழங்கியிருக்கின்றான். அந்த அருள்கள் இதற்கு முன் நமக்கு கிடைத்ததில்லை. அன்னார் தொடர்ந்து கூறுகின்றார். 'தாறுஸ்ஸலாம் பள்ளி முன்னால் முற்காலத்தில் ஒன்றோ இரண்டோ வாகனங்கள் மட்டுமே இருந்தது. இப்போது பள்ளிமுன்னால் பார்க் செய்ய முடியாத அளவில் வாகனங்களின் கூட்டம் உருவாகியிருக்கின்றது'. அருள்களின் பட்டியல் நிரத்திக்காட்டிக்கொண்டு அன்னார் மேலும் தெரியப்படுத்துகின்றார். 'இன்று நமக்கு அளவிற்கு அதிகமான வீட்டு பொருள்கள் இருக்கின்றது. வாஷிங்மெஷின், ரைஸ்குக்கர்கள் போன்றவைகள்'. மேல் கூறிய அருள்களை மிகபெரிய அருள்களாக எடுத்துக்காட்டி இந்த அமீர் மகிழ்ச்சி அடைகின்றார். ஆனால் நான் கூறுகின்றேன் மேல் கூறப்பட்ட இவ்வகை அருள்கள், அவநம்பிக்கையாளர்களுக்கும் உருவ வணக்கம் செய்பவர்களுக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அஹ்மது (அ) மை ஏற்றுக்கொள்ளாத மற்று முஸ்லீம்களுக்கும், ஒருவேளை இதை விட அதிகமாக கிடைத்திருக்கும்.

அஹ்மதியா ஜமாஅத்தின் ஒரு அமீர் இவ்வகையில் கூறும்போது, நாம் ஒரு விஷயத்தைப் புரிந்துக்கொள்ள வேண்டும். உண்மையான இஸ்லாமின் போதனைகளையும் அஹ்மதியத்தின் பாடங்களையும் இந்த அமீர் எட்டி மிதித்துள்ளார். இந்த அமீர் கூறுவது பௌதீக அருளைப்பற்றியதாகும். ஆனால், அல்லாஹ்வும் அவனது ரஸூல்(ஸ)வும் இஸ்லாம் மதவும் அருள்கள் என்பதற்கு பொதுவாக பொருள் கொடுப்பது என்ன? ஒரு முஸ்லீமை பொறுத்தவரையில் ஐந்து வேளை தொழுகை தவிர்த்துக்கொள்ள இயலாத விஷயமாகும், அந்த தொழுகையின் ஒவ்வொரு **'ரக்கா அத்திலும்'** சூர அல் பாத்திஹா ஓதல் கட்டாயமாகும். இனியாராவது சூறா அல்பாத்திஹா ஓதவில்லை என்றால் அவனது தொழுகை வீணானதாகும். இனி, ஒரு **'ரக்கா அத்தில்'** சூறா அல்பாத்திஹா ஓதிட மறந்து விட்டால், ஞாபகம் வரும்போது அதை ஓதி முழுமைப்படுத்த வேண்டியதே ஆகும். அப்போது மட்டுமே தொழுகை முழுமை பெற்றுவிடுவது. பரிபூரணமாகுவது. சுருக்கமாக கூறினால், சூரா பாத்திஹா மிக முக்கியத்துவம் வாய்ந்ததேயாகும். திரு குர்ஆனின் முதல் அதிகாரமாக அது இடம் பெற்றிருக்கின்றது. திருகுர்ஆனின் பிரவேசன அதிகாரம் என்று சூறாஃபாத்திஹாவை அழைக்கப்படுகின்றன. இந்த அதிகாரத்தில் ஏழு வசனங்கள் அடங்கியிருக்கின்றது. அந்த ஏழு வசனங்களில் எல்லாம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதில் ஆறாவதும், ஏழாவதும் வசனங்களுக்காகட்டும் மிக முக்கியத்துவம் இருக்கின்றது. இந்த வசனங்களில் அதாவது துவாவில் நாம் அல்லாஹ்விடத்தில் மன்றாடுகின்றோம். **''எங்களை நீ நேர்வழியில் நடத்துவாயாக! நீ எவர்களுக்கு அருள் புரிந்தாயோ அவ்வழியில் (நடத்துவாயாக) உன் கோபத்திற்கு ஆளானோர் வழியுமல்ல, நெறி தவறியோர் வழியுமல்ல''.**

அமீர் மூஸா தாஜீவிடவும் அன்னாரின் தலைமையிலான செயற்குழு உறுப்பினர்களிடவும் முல்லாக்களிடவும் எனக்கு எழுப்ப வேண்டிய ஒரு கேள்வி, எவ்வகையிலான அருள்களைக் குறித்தாகும் மேல் வசனங்களில் கூறப்பட்டிருப்பது வாகனங்கள், அரிபொடிப்பதற்கான இயந்திரங்கள், அலக்கு இயந்திரங்கள் போன்றவையோ? உங்களுடைய தொழுகையின் ஒவ்வொரு **'ரக்கா அத்திலும்'** நீங்கள் அல்லாஹ்விடம் கேட்பது மேல் கூறப்பட்ட வகையிலான அருள்களை தானோ?. அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளானவர்களின் வழியில் இருந்துள்ள பாதுகாப்பை அல்லவா கேட்கின்றோம்?. நெறிதவறிவிட்டவர்களின் பாதையில் இருந்துள்ள இரட்சிப்பிற்காக அல்லவா நாம் மன்றாடுகின்றோம்?. அல்லாஹ்வின் கோபத்துக்கு ஆளாக்கப்பட்டவர்கள் யார்? தனிப்பட்ட வழியை தேர்ந்தெடுத்து, வழிதவறவிட்டது யார்? இறைஅடையாளங்களிலும், வெளிப்பாடுகளிலும் நம்பிக்கை கொண்டிருந்தவர்களா அவர்கள்?. அல்லாஹ்வின் தூதனின் வருகையில் நம்பிக்கை கொண்டிருந்தவர்களா அவர்கள்? திருகுர்ஆனில் கூறப்பட்டிருக்கும் அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளையும் அஹ்மதியா ஜமா அத்தை சார்ந்தவர்கள் எட்டி மிதிப்பதை பார்க்கும் போது மிக வருத்தம் வருகின்றன. ''புனித குர்ஆன் மார்க்க வழிகாட்டுவது முத்தகீங்களுக்கு மட்டுமே''. அவர்கள் இறை செய்தியை ஏற்றுக்கொள்கின்றோர்கள் ஆவார்கள். நமது பிரியமான தூதர் முஹமது (ஸ) வுக்கு இறக்கப்பட்டிருப்பதிலும் கடந்த காலங்களில் தோன்றிய அனைத்து நபிமார்களுக்கு இறக்கப்பட்டதிலும் இப்போது தோன்றியிருப்பதும் எதிர்காலத்தில் தோன்றயிருப்பதுமான அனைத்து நபிமார்களுக்கு இறக்கப்படுவதிலும் அவர்கள் நம்பிக்கை கொள்கின்றோர்கள் ஆவார்கள். அவ்வாறு நம்புகின்றோர்கள் மட்டுமே அல்லாஹ் திறக்கும் பாதை வழியாக பயணம் புரிகின்றோர்கள். வெற்றியை எட்டுவதும் அவர்களே ஆகும். காரணம் அவர்களின்

உள்ளங்களில் அல்லாஹ்வை குறித்துள்ள பயத்தால் நிறைந்திருக்குமேயல்லாமல் மற்று உயிரினங்களைப்பற்றிய அச்சம் அவர்களின் உள்ளத்தில் இருப்பதில்லை.

இப்போது, அஹ்மதியா ஜமாஅத் அவர்களின் கலீஃபாவை அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கலீஃபாவை மக்கள் முன்னால் வெளிப்படுத்தி காட்டுவது அனைவரும் அஞ்ச வேண்டிய ஒரு நபராக. அதாவது அல்லாஹ்வை விட அதிகம் பயப்படவேண்டியது கலீஃபாவை என்று அவர்கள் எண்ணுகின்றன. நீங்கள் புரிந்துகொள்ளுங்கள், அஹ்மதிகள் அவர்களின் கலீஃபாவை அஞ்சுகின்றன. அவர்களின் அமீறை பயப்படுகின்றன. அவர்களின் மௌலவிமார்களை பயப்படுகின்றன. சுருக்கமாக சொன்னால், அல்லாஹ்விடம் அவர்களுக்கு எவ்வித அச்சவும் இல்லாத நிலை உருவாகிவிட்டது.

முன்காலங்களில் அல்லாஹ் பேசியதுப் போன்று இப்போது அவன் பேசிக்கொண்டிருக்கின்றான் என்பதை கடந்த 130 வருடங்களாக அஹ்மதியா ஜமாஅத் தங்களின் **“தப்லீக்”** வழியாகவும் வெளியீடுகள் மூலவும் முஸ்லீங்களைப் புரியவைக்க முயற்சிக்கின்ற ஒரு விஷயமாகும், நுபூவத்துவத்தின் வாசல் எப்போதும் திறந்தே இருக்கும் என்பதை குறித்து ஆயிரக்கணக்கான நோட்டீஸ்களும் மற்று நூல்களும் அவர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள். மட்டுமின்றி மற்று மக்கள் புரிந்து கொள்வதற்கு அவ்வகையான நூல்களை இலவசமாகவும் வழங்கி வந்தார்கள். ஆனால் இந்த நூற்றாண்டில் அல்லாஹ் இந்த எளியவனை எழும்பச் செய்தபோது அவர்கள் பரிகாசவார்த்தைகளாலும் ஆணவத்தோடும் இந்த இறைவெளிப்பாடுகளுக்கு எதிராக செயல்படுகின்றன. அவர்கள் இந்த வெளிப்பாடுகளுக்கு சாத்தானிக வெளிப்பாடுகள் என்று பெயர் சூட்டினார்கள். இந்த இறை அருளை எவ்வாறு அல்லாஹ் அவர்களிடமிருந்து நீக்க செய்தான் என்று பாருங்கள். **“அவர்களின் ஐந்தாவது கலீஃபாவுக்கு அல்லாஹ்விடமிருந்து கிடைத்ததாக ஒரு வார்த்தை கூட இதுவரையிலும் வெளிப்படுத்தவில்லை. ஒன்று யோசித்துப்பாருங்கள் அவர்களின் ஐந்தாவது கலீஃபாவுக்கு குறைந்தது ஒரே ஒரு வெளிப்பாடாவது கிடைத்திருப்பின் அவ்வார்த்தை உலகெங்கும் பரவியிருக்கும்”.** துரதிர்ஷ்டம் அல்லாஹ்வின் வெளிப்பாடுகளை அவர்கள் ஏளனம் செய்தார்கள். இந்த வெளிப்பாடுகளில் இருந்து அவர்கள் முகம் திரித்து கொண்டார்கள். ஹஸ்ரத் முஹமது முஸ்தபா (ஸ) வின் மிம்பறினை அவர்கள் துர்வினியோகம் செய்தார்கள். நான் கூறுவதை கேட்கக்கூடாது என்றும் நான் எழுதுவதை படிக்ககூடாது என்றும் அவர்கள் அஹ்மதிகளிடத்தில் கட்டளையிட்டன.

இன்று 80 சதவிகிதத்திற்கு மேற்பட்ட அஹ்மதிகளின் உள்ளங்களும் கலீஃபாவின் பெயரில் அடைந்து போய்விட்டது. அல்லாஹ் வழங்கும் உண்மையை அவர்கள் நிராகரிக்கின்றார்கள். அவர்கள் பிரச்சாரம் செய்கின்ற விஷயம் அஹ்மதியா ஜமா அத்து வழியாக அவர்கள் காண்கின்றார்கள் என்றும் அல்லாஹ்வின் அருளான கிலாஃபத் எங்களுடன் இருக்கின்றது என்று அவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ் அவர்களுக்கு கிலாஃபத்தை வழங்கினான். எல்லாம் நேர்மையாக நடைபெற்று வந்த காலம் வரையிலும் அல்லாஹ் அதற்கு உதவியளித்து வந்தான். அதாவது அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும், திருநபி(ஸ) வுடையவும் ஹஸ்ரத் அஹ்மது (அ) முடையவும் போதனைகளுக்கும் ஏற்றவார் கிலாஃபத் அமைப்பு செயல்பட்டுவந்த வரையில் அல்லாஹ் அதற்கு அருள்புரிந்து கொண்டான். அல்லாஹ்வின் ஜமாஅத்தை உண்மையின்பால் வழிநடத்திச் செல்ல மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட

கலீஃபாக்களுக்கு கூட இறைவெளிப்பாடுகளின் சில வார்த்தைகளும் இறைவேண்டுகோளுகளும் கிடைத்திருக்கின்றது. ஆனால் அல்லாஹ்வின் கட்டளைகளைவிட அவர்களின் கலீஃபாவின் வார்த்தைகளுக்கு முக்கியத்துவவும், முதல் இடவும் மக்கள் வழங்கிய போது, ஹஸ்ரத் முஹமது (ஸ)வுடையவும் ஹஸ்ரத் அஹ்மது (அ) முடையவும் போதனைகளை அவர்கள் எட்டிமிதிக்க துவங்கிய போது அல்லாஹ் அவனது அருளை அவர்களிடமிருந்து நீக்க செய்தான். அவர்களின் நெறிகேடான இச்செயல்களின் காரணமாக அல்லாஹ்வின் கோபம் அவர்களின் மீது இறங்க வேண்டியதல்லவா? அவநம்பிக்கையாளர்களுக்கு எதிரில் எங்களுக்கு வெற்றிய வழங்குவாயாக என்று இதற்கு முன் பிரார்த்தனைகள் செய்து வந்தவர்களின் முன்னால் இறைசெய்தியும், அருள்களும் இறங்கியபோது, அதை அவர்கள் புறக்கணித்துவிட்டார்கள். தனது அமீறின் ரிப்போர்ட்டின் அடிப்படையை மட்டும் முன்வைத்து கொண்டு அவர்களின் கலீஃபா, அல்லாஹ்வின் அடியார்களின் மேல் சாபவார்த்தைகளை கொட்டவில்லையா? அல்லாஹ்விடமிருந்து வந்த இந்த தூதுசெய்தியை நிராகரித்துவிட்டதற்கு அவர்களின் கலீஃபா மீது இறைகோபம் இறங்க வேண்டுமல்லவா?

அல்லாஹ்விடமிருந்து வெளிப்பாடுகள் கிடைக்கின்றது என்று ஒருவர் கூறுகின்றார். மற்றொருவர் அந்த வெளிப்பாடுகளை எழுதி வைக்கின்றார். இக்காரணத்தால் அவர்கள் இருவரையும் ஜமாஅத்தில் இருந்து வெளியேற்றச் செய்கின்றன. இவர்கள் இரண்டு பேர்களை வெளியேற்றினாலும் பரவாயில்லை, லட்சக்கணக்கான நபர்கள் அஹ்மதியா ஜமாஅத்தில் வருவார்கள் என்று ஜமாஅத்தின் தலைமையகத்தைச் சார்ந்தவர்கள் கூறுகின்றார்கள். மேலும், அவர்கள் தெரிவித்தார்கள் இவர்கள் இரண்டு பேர்களும் கடுமையான ஒரு விதியினை நேரிட போகின்றார்கள்.

அல்லாஹ்வின் அருளால் எங்களை ஒரு ஜமாஅத்தாக அவன் உயர்த்தினான். இந்த ஜமா அத்திற்கு அவனே பெயர் சூட்டினான். எனக்கு கிடைக்கும் இறைவெளிப்பாடுகளில் உங்களுக்கும் நம்பிக்கை வரவில்லையென்றாலும், நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்றும், இனி நம்பிக்கை வரவில்லையென்றால், நம்பிக்கை கொள்வதற்காக உங்களை வயுறுத்த எங்களுக்கு இயலாது என்றும் நாங்கள் அறிகைவிடுத்திருந்தோம், அதற்கு பதிலாக அவர் (மிர்ஸா தாஹிர் சாஹிப்) அதிகார நோக்கத்துடன் கூறியது இவ்வாறாகும். ‘‘இரண்டு நபர்கள் ஜமாஅத்தில் இருந்து வெளியேறும் போது, அதற்கு பதிலாக லட்சங்கள் அஹ்மதியா ஜமாஅத்தில் பை-அத் செய்து இணைந்திடுவார்கள்’’. அந்த பை-அத்துகளை குறித்து சாத்தானிக பைஅத்துகள் என்று சொல்வது சரியல்ல. அல்லாஹ்வின் நேசர்களான நல்லடியார்களின் மீது அவன் செய்துள்ள அருள்களோடுள்ள பொறாமையே ஆகும் இவ்வாறு நிகழ்வதற்கு காரணம். அவர்கள் சிந்திக்காத காரணத்தால் அல்லாஹ்வின் கோபம் அவர்கள் மீது இறங்கியது. 2001, 2002-ல் மௌரீஷியஸ் அஹ்மதியா ஜமாஅத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் எனக்கு எதிராக பேசுவதற்காகவே அவர்கள் உற்சாகம் காட்டினார்கள். இந்த எளியவனுக்கு கிடைக்கும் இறைவெளிப்பாடுகளை குறித்தே அவர்கள் பரிகசித்து பேசினார்கள். முல்லாக்கள் அவர்களின் சக்திபிரகடனத்தை மேடை வழியாக காட்டிவிட்டார்கள். தீ துப்புகின்ற அரசியல்வாதிகளுக்கும் இவர்களுக்கும் இடையில் எந்தவித வேற்றுமையுடம் காணயியலாது. சில பாறைகள் கூட நீர் பொட்டி வடிவதுண்டு. அல்லாஹ்வின் மீதான பயம் காரணத்தால் சிலவை பூமிக்குள் அமிழ்ந்து போகுவதுண்டு.

இது என்ன அவமானம்? உண்மையை கண்டுக்கொண்டதற்கு பிறகும், பொய்மையால் அதை மூடிக்கொண்டார்கள். என்னை எவ்வாறெல்லாம் அக்கிரமித்து கொள்ளலாம் என்று அவர்கள் தங்களின் ஜமாஅத்து நபர்களுக்கு கற்று கொடுக்கின்றார்கள். எனக்கு **“சலாம்”** செல்லக்கூடாது என்றும் அவர்கள் அறிகை விடுத்துள்ளார்கள். அவ்வாறு செய்கின்றோர்கள் எத்தகையார்கள் என்றும் அவர்களுக்கு நன்றாக தெரியும். ஆனால் ஒரு உண்மையான நம்பிக்கையாளர் அதாவது எவர் ஒருவர் அல்லாஹ்வின் கட்டகைளை பின்பற்றுகின்றானோ, எவர் ஒருவரின் உள்ளம் அல்லாஹ்விடமுள்ள பயத்தால் நிறைந்திருக்கின்றதோ அத்தகை நபர்கள் இச்செயல்கள் செய்யமாட்டார்கள். காரணம் அது ஏனைய மக்களை வேதனைக்கு ஆளாக்கிவிடும் என்பதால். அவர்களின் உள்ளங்களில் உண்மையான இறைபயவும் நம்பிக்கையும் புகுந்திருந்தால், அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அவர்கள் கட்டுப்படுகின்றவர்களாகயிருந்தால் அவர்களுக்கு மிக சிறந்த பிரதிபலன் அவனிடத்தில் இருந்து கிடைத்திருக்கும். ஆனால் துரதிர்ஷ்டம் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் அவன்பால் உள்ள நம்பிக்கைகளுக்கும் மாறாக மற்று விஷயங்களுக்கு அவர்கள் முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றார்கள். இறைகட்டளைகளுக்கு எதிராக செல்படுகின்றவர்கள், நம்பிக்கையை இழந்தவர்களே ஆவார்கள். அவர்கள் முற்றிலும் தவறான பாதை வழியாக பயணம் செய்து கொண்டிருக்கின்றார்கள். அதனால் அவர்கள் உண்மை வழியை மறந்துவிட்டார்கள். தொழுகையில் அவர்கள் அனைத்து துஆக்களும் செய்கின்றார்கள். சூறா அல் பாத்திஹாவின் கடைசி வசனமான **“உனது கோபத்திற்கு ஆளானோர் வழியுமல்ல, நெறிதவறியோர் வழியுமல்ல”** என்ற துவாவும் செய்கின்றார்கள் என்றாலும் அவர்கள் நெறிதவறியோர்களே ஆவார்கள். எல்லாத்திற்கும் மேலாக நீங்கள் கூச்சல் குழப்பங்களை ஏற்படுத்துவதும் புறக்கணிக்கவும் செய்கின்றீர்கள். ஒரு சகோதரனுக்கு தனது சகோதரியை தனது ஒரு நிகழ்ச்சிக்கு அழைக்க முடியாத நிலை உருவாகியிருக்கின்றது. சொந்த பந்தங்களை நீங்கள் முறிக்கின்றீர்கள். உங்களது இவ்வகையான புறக்கணிப்பு மூலம் எங்களுக்கு எதுவும் ஏற்படபோவதில்லை. அல்லாஹ்வின் அருள்களை பாரினில் எட்ட செய்வது நீங்களல்ல. திரு குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான் அல்லாஹ் நாடுகின்றோர்களுக்கு அவன் அருள் செய்கின்றான். அவன் மகத்தான அருள்களின் உடமையாவான். அல்லாமல் அந்த அமீர் கூறும் போன்று பௌதீக அருள்களை குறித்தல்ல அல்லாஹ் இங்கு கூறுவது. வாகனங்கள், அரிபொடிக்கும் இயந்திரங்கள், கூல் இயந்திரங்கள் போன்றவை அருளாக காணுகின்றார் இந்த அமீர். அல்லாஹ்வே தேர்ந்தெடுத்து, அவனது அருள்களை அவன் நாடுகின்றோர்களுக்கு வழங்குகின்றான். அந்த மகத்தான அருள்களை வழங்குவதற்கு அவனுக்கு அமீனீயுடையவோ, மூஸாதாஜீவுடையவோ வக்கீலுல் ஆலாவுடையவோ வகீலுதப்சீறுடையவோ அனுமதி தேவையில்லை என்று புரிந்து கொள்ளுங்கள்.

*Issued by:* R. Jamaludin Raother Amir (South Zone)
Jamaat Ul SahihAl Islam, Kerala (Regd) India.
Email: jamal.raother@gmail.com
Web: www.jamaat-ul-sahih-al-islam.com
Phone: 09447001832

Translated by
**Azim Ahmad**
*Sadr Sahibul Faraj*
Kerala/ TamilNadu
E-mail: sahihazisulsat@gmail.com
Cell: 09789180817